# மே– 08 – புதன்

## மகனைக்கண்டு அவரிடம் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலைவாழ்வு பெற வேண்டும் என்பதே என் தந்தையின் திருவுளம்” யோவா.6:40

### முதல் வாசகம் : திருத்தூதர் பணி 8 : 1 – 8

அந்த நாள்களில் எருசலேம் திருச்சபை பெரும் இன்னலுக்குஉள்ளாகியது. திருத்தூதர்களைத் தவிர மற்ற அனைவரும் யூதேயா, சமாரியாவின் நாட்டுப் புறமெங்கும் சிதறடிக்கப்பட்டுப் போயினர். இறைப்பற்று உள்ள மக்கள் ஸ்தேவானை அடக்கம்செய்து, அவருக்காக மாரடித்துப் பெரிதும் புலம்பினர்.சவுல் வீடுவீடாய் நுழைந்து ஆண்களையம் பெண்களையும் இழுத்துக் கொண்டுபோய், அவர்களைச் சிறையிலடைக்கச் செய்தார். இவ்வாறு அவர் திருச்சபையை அழித்துவந்தார். சிதறிய மக்கள் தாங்கள் சென்ற இடமெல்லாம் நற்செய்தியை அறிவித்து வந்தனர்.பிலிப்பு சமாரியா நகர் சென்று அங்குள்ள மக்களுக்கு மெசியாவைப்பற்றி அறிவித்தார்.பிலிப்பு சொன்னவற்றைக் கேட்டும் அவர் செய்த அரும் அடையாளங்களைக் கண்டும் வந்த திரளான மக்கள் ஒரு மனத்தோடு அவருக்குச் செவிசாய்த்தனர்.ஏனெனில் பலரைப் பிடித்திருந்த தீய ஆவிகள் அவர்களிடமிருந்து உரத்தக் குரலுடன் கூச்சலிட்டுக் கொண்டே வெளியேறின. முடக்குவாதமுற்றோர், கால் ஊனமுற்றோர் பலரும் குணம் பெற்றனர்.இதனால் அந்நகரில் பெரும் மகிழ்ச்சி உண்டாயிற்று.

**பதில்பாடல் :** அனைத்துலகோரே கடவுளைப் போற்றி ஆர்ப்பரியுங்கள்

### நற்செய்தி : யோவான் 6 : 35 – 40

அக்காலத்தில், இயேசு மக்கள் கூட்டத்தை நோக்கி,”வாழ்வு தரும் உணவு நானே. என்னிடம் வருபவருக்குப் பசியே இராது. என்னிடம் நம்பிக்கை கொண்டிருப்பவருக்கு என்றுமே தாகம் இராது.ஆனால், நான் உங்களுக்குச் சொன்னவாறே நீங்கள் என்னைக் கண்டிருந்தும் நம்பவில்லை. தந்தை என்னிடம் ஒப்படைக்கும் அனைவரும் வந்து சேருவர். என்னிடம் வருபவரை நான் புறம்பே தள்ளிவிடமாட்டேன்.ஏனெனில் என் சொந்த விருப்பத்தை நிறைவேற்ற அல்ல, என்னை அனுப்பியவரின் விருப்பத்தை நிறைவேற்றவே நான் விண்ணகத்திலிருந்து இறங்கி வந்தேன்.”அவர் என்னிடம் ஒப்படைக்கும் எவரையும் நான் அழிய விடாமல் இறுதி நாளில் அனைவரையும் உயிர்த்தெழச் செய்ய வேண்டும். இதுவே என்னை அனுப்பியவரின் திருவுளம்.மகனைக் கண்டு அவரிடம் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலைவாழ்வு பெறவேண்டும் என்பதே என் தந்தையின் திருவுளம். நானும் இறுதிநாளில் அவர்களை உயிர்த்தெழச் செய்வேன்” என்று கூறினார்.

**தியானம்:** இவ்வுலகத்தில் வாழும் நாம் அனைவரும் நிறைவான, முழுமையான வாழ்வைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே நம் கடவுளின் விருப்பம். “நான் ஆடுகள் வாழ்வைப் பெறும்பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும பொருட்டு வந்துள்ளேன்” (யோவா.10:10). முழுமையான வாழ்வு என்பது நமது உடல், ஆன்மா மற்றும் சிந்தனையளவில் நாம் எக்குறையுமின்றி வாழ்வது. “அமைதி அருளும் கடவுள் தாமே உங்களை முற்றிலும் தூய்மையாக்குவாராக. அவரே நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வரும்போது உங்களுடைய உள்ளம், ஆன்மா, உடல் அனைத்தையும் குற்றமின்றி முழுமையாகக் காப்பாராக. உங்களை அழைக்கும் அவர் நம்பிக்கைக்குரியவர். அவர் இதைச் செய்வார்” (1தெச.5:23-24). உலகத்தின் பார்வையில் ‘நிறைவான வாழ்வு’ என்பது மற்றொரு வார்த்தையில் சொல்வதென்றால் ‘ஆசீர்வாதமான வாழ்வு’ என்பது. நிறைய செல்வம், பொருளாதார செழிப்பு, ஆரோக்கியமான வாழ்வு, செறிந்த அறிவு, குழந்தைச் செல்வம், உயர்வான பதவி, மதிப்பு, மரியாதை என்று இவ்வுலகத்தின் செல்வங்களின் அடிப்படையிலும், உலக மதிப்பீடுகளை வைத்தும் கணக்கிடப்படுகின்றது. ஆனால் இன்றைய முதல்வாசகத்தில் வாசிப்பது போன்று உயிர்த்த இயேசுவின் வல்லமையை இந்த உலகத்தில் வெளிப்படுத்தி அதிலிருக்கும் ஆற்றலை நமது வாழ்க்கையில் வெளிப்படுத்துவதே உண்மையான நிறைவாழ்வு. எனவேதான் தூய பவுலடியார் கூறுவார் “உண்மையில் என்னைப் பொறுத்த மட்டில் என் ஆண்டவராம் கிறிஸ்து இயேசுவைப் பற்றிய அறிவே நான் பெறும் ஒப்பற்ற செல்வம். இதன் பொருட்டு மற்ற எல்லாவற்றையும் இழப்பாகக் கருதுகிறேன். அவர் பொருட்டு நான் அனைத்தையும் இழந்துவிட்டேன். கிறிஸ்துவை ஆதாயமாக்கிக் கொள்ள எல்லாவற்றையும் குப்பையாகக் கருதுகிறேன். கிறிஸ்துவையும் அவர்தம் உயிர்த்தெழுதலின் வல்லமையையும் அறியவும் அவருடைய துன்பங்களில் பங்கேற்று, சாவில் அவரை ஒத்திருக்கவும் விரும்புகிறேன்” (பிலி.3:8-10). இந்த சத்தியத்தை உணருகின்றபோதுதான் மனிதன் தான் வெறும் சதைப்பிண்டமல்ல. எனக்குள் ஒரு ஆத்துமா இருக்கின்றது. அது தேவனுடைய வல்லமைக்காக காத்திருக்கின்றது என்ற சத்தியம் நமக்கு புரியும். மண்ணால் உண்டாக்கப்பட்ட இந்த சரீரம், இந்த மண்ணுக்கே திரும்பும். ஆனால் கடவுளிடமிருந்து பெற்றுக்கொண்ட நமது ஆத்துமா மீண்டும் கடவுளிடம் திரும்பிச் செல்லும். மதிப்பற்ற இந்த உடலைப் பிடித்துக் கொண்டு மகிமையான நமது ஆத்துமாவை நாம் இழந்துவிடக்கூடாது. உண்மையான வாழ்வு என்பது நமது ஆத்துமத்தின் அதிபதியான கிறிஸ்து இயேசுவை நாம் சொந்தமாக்கிக் கொள்வது என்பதுதான் நற்செய்திவாசகம் நமக்குக் கற்றுக்கொடுக்கும் சத்தியம். “வாழ்வு தரும் உணவு நானே. என்னிடம் வருபவருக்குப் பசியே இராது, என்னிடம் நம்பிக்கைக் கொண்டிருப்பவருக்கு என்றுமே தாகம் இராது” (யோவா 6:35). எனவே வாழ்வின் தேவனை நமக்குச் சொந்தமாக்கி மகிமையோடு வாழுவோம்.